வரலாற்றுத் திரிபுடன் 'ஜோதா அக்பர்'.

அ.மயூரன்
ஒருபேப்பருக்காக)

அண்மையில் வெளியான திரைப்படங்களில் பிரபல்யமாகப் பேசப்படுவது ஜோதாஅக்பர் என்கின்ற திரைப்படம். இப்படம் உண்மை வரலாற்றுடன் அக்பர் சக்கரவர்த்தியின் காதல் கதையை மையமாகவும் வைத்து எடுக்கப்பட்டதென்று கூறப்படுகின்ற போதிலும் அதில் வரலாறு பெரும் திரிபுக்குட்படுத்தப்பட்டுள்ளது.இந்த வரலாற்றுத் திரிபுகளை வாசகர்களுடனும் பகிர்ந்துகொள்ளும் நோக்குடன் இக்கட்டுரையை தொடர்கின்றேன்.

இந்துக்களையும் முஸ்லிம்களையும் ஒரே மாதிரியான அணுகுமுறையுடன் ஆள விரும்புகின்றான் அக்பர். இதற்காக அஜ்மீரை ஆளும் இரஜபுத்திர அரசன் பர்மலின் மூத்தமகள் ஜோதிபாயை மணந்து கொள்கின்றான். இதனால் ஏற்படுகின்ற விளைவுகள், செவிலித்தாயின் சித்துவிளையாட்டு, அக்பரை விட்டுதந்தையிடம் செல்லும் ஜோதிபாய், கணவன் வந்து அழைத்தும் ஆக்ரா திரும்ப மாட்டேன் என அடம்பிடிக்கின்ற மனைவி, பின்னர் எப்படி அவளாகவே கணவனிடம் சென்றடைகின்றாள் என்பதாக உண்மை வரலாற்றுடன் கற்பனையும் கலந்து மூன்றே கால் மணி நேரப் படமாக்கப்பட்டிருக்கிறது. இந்தப் படத்தில் அப்படி என்ன வரலாற்றுத் திரிபு நடந்திருக்கின்றது என்கின்றீர்களா? தொடர்ந்து படியுங்கள்.

உண்மை வரலாற்றையே தாம் படமாகத் தந்ததாக இயக்குனர் அசுதோஷ் கவ்ரிகர் தெரிவித்து விட்டு அக்பரின் மனைவி விடயத்திலேயே கோட்டை விட்டு விட்டார். அதாவது வரலாற்றில் அக்பரின் மருமகளாக விளங்கிய ஜோதிபாயை மனைவியாக காட்டிவிட்டாரே. இது மாபெரும் வரலாற்றுத்தவறு என்பதை வரலாறு அறிந்தவர்கள் நிச்சயம் உணர்வார்கள்.

இந்தியாவிலே இஸ்லாமிய சாம்ராச்சியத்திற்கு அத்திவாரம் இட்டவர் பாபர் (1483-1530) அவர்கள். அதன் பின் அச்சாம்ராச்சியத்தை நான்கு வருடங்களில் கட்டியெழுப்பி ஸ்ரீநகரிலிருந்து தெக்காணம் வரையும், காபுலில் இருந்து வங்காளம் வரையும் ஒரு பெரிய மொகலாய சாம்ராச்சியத்தை உருவாக்கிய பெருமை பாபரின் பேரனான ஜலாலுதின் முகமது அக்பர் (1542-1605) அவர்களையே சாரும். இவர் மொகலாய மன்னன் பாபரின் வாரிசான ஹுமாயூன் (1508-1586) அவர்களின் மகனே. இந்திய வரலாற்றில் மறக்க முடியாத அளவிற்கு பெருமை பெற்றவர் அக்பர் அவர்கள்.

இந்தியாவின் மொகலாய மன்னர்கள் பாரம்பரிய இஸ்லாமிய மதத்தைக் கடைப்பிடித்தவர்கள் அல்லர். இஸ்லாமின் ஒரு பிரிவான சூஃபி மதத்தைக் கடைப்பிடித்தவர்கள். இது இஸ்லாம், இந்து, பௌத்தம் ஆகியவற்றின் கோட்பாடுகள் அடங்கியது. இதை உருவாக்கிய பெருமை அக்பர் அவர்களைத்தான் சேரும். ஒரு கட்டத்தில் அக்பர் அவர்கள் இந்துவாக மாறிவிட்டார். என்று இஸ்லாமியர் கூறும் அளவுக்கு இந்து முஸ்லிம் உறவைப் பேணிய ஒரே ஒரு மன்னன் அக்பர் அவர்களே. அத்துடன் இந்தியாவில் நடமாடும் கவசவாகனத்தை அறிமுகப்படுத்தியவரும் இவரே. பிரதாப் மன்னனோடு சண்டையிட்டு 900 ஆண்டுகள் நிலைத்திருந்த சிற்றூர்க் கோட்டையை கைப்பற்றுவதற்காக இவர் நடமாடும் டாங்கியை(கோட்டையை) உருவாக்கினார். என்பது குறிப்பிடத்தக்கது. இதனாலேயே இந்தியாவின் யுத்த உலங்குவானூர்தி அக்பர் ஹெலி என அழைக்கப் படுகிறது. 1556 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி அக்பர் அவர்களை பேரரசர் என பிரகடனம் செய்தனர். பின் 17 ஆம் திகதி முறைப்படி முடிகூட்டு விழாவும் நடாத்தி முடித்தனர்.

அந்தக்காலத்தில் மொகலாய மன்னர்கள் கஜானாவை நிரப்பியதைப் போல் அந்தப்புரங்களையும் நிரப்பிக் கொண்டிருந்தார்கள். அந்தவகையில் அக்பர் அவர்களுக்கும் 34 மனைவிகள் இருந்தனர் என்பது பெரிய விடயமல்ல இதில் அனைவருமே மலைசன்ஸ் பெற்ற மனைவிகள் என்று சொல்லமுடியாது பலர் ஆசை நாயகிகளாகவும் இருந்திருக்கலாம். வரலாற்று ஆசிரியர்கள் அக்பரின் மனைவிகளாக குறிப்பிட்டுக் காட்டியிருப்பது ருகையா சுல்தானா பேகம், ஷாலிமா சுல்தானா பேகம், மரியம் - வுஜ்ஜமானி என்கின்ற மான்கன்வர், ஷகினா பேகம், ஹிராகுன்வாரி, ஆகியோரையே. இதில் ஜோதா பாயினுடைய பெயரே இடம் பெறவில்லை.

மேலும் வரலாற்றை நோக்குகின்ற போது அக்பரின் தந்தை ஹுமாயூனின் கடைசித்தம்பி ஹிந்தால் இறந்த பிறகு அவரின் மகளான ருகையா சுல்தானா பேகத்தை மணமுடித்தார். பின் 1557களின் தொடக்கத்தில் அப்துல்லா கானின் மகளை இரண்டாவது மனைவியாகத் திருமணம் செய்து கொண்டார். இப்படியாகத் தொடர்ந்து அக்பரின் மனைவிகளது எண்ணிக்கைகள் 34 ஆக உயர்ந்திருக்கிறது. இதில் இரஜ புத்திரிகளும் உள்ளடங்குவர். இதில் ஜோதிபாயினது பெயரை வரலாற்றாசிரியர்கள் கூறவில்லை.

அக்பரினுடைய மகன் ஜஹாங்கீர் (சலீம்) (1569-1627) ஆவார் இவருக்கு இரு மனைவியர்கள் உண்டு. ஒன்று ஜோதா பாய், மற்றையது நூர்ஜகான். அதில் ஜோதா பாய் இராஜ புத்திர வம்ச இளவரசியாவாள். அதாவது மோத்திராஜா மார்வர் மன்னன் உதய்சிங்கின் மகளே ஜோதா பாய் என்கிறது வரலாறு. இவள் ஜஹாங்கீரரை (சலீம்) விட மூன்று வயதே இளையவள். அடப்பாவிகளே! இவள் எப்படி அவனுக்கு அம்மாவாக இருக்க முடியும்? சலீமை மணந்து கொண்ட ஜோதா மார்வர் மன்னன் உதய் சிங்கின் மகளா? படத்தில் அஜ்மீரின் மன்னன் பார்மலின் மூத்த மகள் ஜோதா பாய் என்கின்றார்கள். அது தவறு அவனது மூத்த மகள் கர்க் பாய் என்கின்ற ஹர்குமாரி ஆகும்.

அத்துடன் ஜோதாபாய் தாஜ்மஹாலைக்கட்டிய சாஜகானின் சிறிய தாயாவாள். ஜஹாங்கீரின் இரு மனைவிகளில் ஒருத்தியான நூர்ஜகானுக்குப் பிறந்த பிள்ளையே சாஜகான் ஆவார். மேலும் நூர்ஜகானின் சகோதரன் ஆசப்கானின் மகளே மும்தாஜ். எனவே அக்பரின் மனைவி ஜோதாபாய் அல்ல அவள் அக்பரின் மகனான ஜஹாங்கீரின் மனைவியே. மருமகளை இங்கே மனைவியாக்கி விட்டார்கள். அக்பரின் வாழ்க்கையைப் பார்த்தால் அவை சதிகள், சாகசங்கள் நிறைந்ததாகவே உள்ளது. இதை எல்லாம் எழுதப் படிக்கத்தெரியாத அப்பேரரசர் எப்படி முறியடித்தார் என்பது வியப்பே.

வரலாறு தெரியாத நாம் அப்படத்தைப் பார்த்து விட்டு இது சரியான தகவல் என்று நம்பி அதை பிறிதோர் சந்தர்ப்பத்தில் பயன்படுத்த முயன்றால் வரலாறு திரிபடைந்து உண்மை வரலாறு மங்கிவிடும்.

இவ்வாறு தான் இராமாயணக் கதைகளும் திரிபடைந்து இன்று உண்மை வரலாறாக மாற்றம் பெற்றுள்ளமைக்கும் அசுதோஷ் போன்றவர்களும் ஒரு காரணமாக அமைந்திருக்கின்றனர். சில நூற்றாண்டுகளுக்கு முன் நடந்த உண்மை வரலாற்றினையே இவ்வாறு திரித்து விட்டனர் என்றால் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்ததாக கூறப்படும் இராமாயணத்திலே எவ்வளவு திரிபுகள் இருக்கும் என்பதனை எண்ணிப் பார்க்க வேண்டியதில்லை. எனவே வரலாறு சம்பந்தமாக மேற்கொள்கின்ற எந்த விடயத்திலும் வரலாறு திரிபடையாது பார்த்துக் கொள்வது மிகவும் முக்கியமாகும்.

போரும் அமைதியும்

ஒரு நாடு அமைதியான சூழ்நிலையில் இருக்கும் போது பல்வேறு நன்மைகளைப் பெறும். அதாவது பொருளாதார ரீதியாகவும் சுகாதார ரீதியாகவும் பல்வேறு பட்ட நன்மைகளை பெறும் நிலையில் இருக்கும்.

பொருளாதார ரீதியில் நோக்கும் போது ஓர் நாடு தனது அபிவிருத்திக்காக உலக நாடுகளில் பல்வேறு பட்ட கடன்களை பெறக் கூடிய சூழ்நிலையில் இருக்கும். மேலும் அமைதியான சூழ்நிலையில் உல்லாசத் துறையானது அபிவிருத்தி அடைந்த நிலையில் காணப்படும். இதன் விளைவாக அந்நிய நாட்டுச் செலவாணியின் பங்களிப்பு அதிகரித்த நிலையில் காணப்படும். இந்நிலை ஓர் நாட்டுக்கு சாதகமான நிலையை காட்டும்.

இவற்றினைக் கொண்டு அந்நாடு ஏனைய துறைகளான கல்வி, சுகாதாரம். போக்குவரத்து போன்ற பல்வேறு பட்ட துறைகளை அபிவிருத்தி செய்யலாம். இதனால் நாடும் வளம் பெறும் மக்களும் வளம் பெறுவார்கள்.

மாறாக இந்நாடு ஓர் போர் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டால் இந்நாடு பாரிய இடர்பாடுகளை எதிர் நோக்க வேண்டி வரும். ஏனெனில் நாடு போர் நிலைக்கு தள்ளப்படும் போது அங்கு அமைதி நிலை அற்றுப் போகின்றது. இதன் விளைவாக நாடு பல இன்னல்களை எதிர் நோக்குகின்றது.

அதாவது பொருளாதார ரீதியில் நோக்கும் போது நாட்டின் வியாபார ரீதியில் ஏற்றுமதி இறக்குமதி போன்றவற்றில் பாதிப்புகள் ஏற்படும்.

இதன் விளைவாக பொருளாதாரம் வீழ்ச்சி அடையும். இவ்வீழ்ச்சியினால் அந்நிய செலவாணியில் பற்றாக் குறை ஏற்பட்டு நாடு வறுமை நிலைக்குத் தள்ளப்படும். இவ் வறுமை நிலையினால் நாடு பல துறைகளில் வீழ்ச்சியை எதிர் நோக்க வேண்டி இருக்கும்.

போர் உபகரணங்களில் செலவிடும் தொகையானது அதிகரித்த நிலையிலும் அபிவிருத்தி செய்ய வேண்டிய துறைகள் அனைத்தும் பின் தங்கிய நிலையில் காணப்படும். இதன் விளைவாக கல்வித்துறை, சுகாதாரத்துறை போன்ற பல துறைகளிலும் நாம் வீழ்ச்சியை எதிர் நோக்கலாம்.

இவை இவ்வாறு இருக்க மக்களின் செலவானது அதிகரித்த வண்ணம் இருக்கும். வாழ்க்கைச் செலவு அதிகரித்த போதிலும் வருமானம் ஆனது அதிகரிக்காத நிலையில் காணப்படும். இதனால் நாடு பசிக்கும் பட்டினிக்கும் உள்ளாக வேண்டி வரும்.

மேலும் போர் நிமித்தம் காரணமாக சூழல் மாசடைந்து பாரிய நோய்களை மக்களுக்கு ஏற்படுத்தக் கூடிய நிலையை உண்டாக்கும். இதனால் மக்களின் பிறப்பு வீதம் குறைந்து இறப்பு வீதம் அதிகரித்த நிலையை உருவாக்கும். இந்த நிலையானது ஓர் நாட்டுக்கு சாதகமானது என்று கூற முடியாது.

எனவே மக்கள் ஆகிய நாம் எம்மால் இயன்றவரை போர்களை நிறுத்தி அமைதி நிலையைப் பேண முற்படுவோமாக.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க என்ற கூற்றுக்கு அமைய நாம் வாழ்வோமே இதனால் நாடு வளம் பெறும்.

- ஜனனி விஜயமனோகர் (வயது 15)
திருவள்ளுவர் தமிழ் பள்ளி

ஹா ஹா ஹா...

நபர் 1 : என்ரை மனிசிக்கு மனநலம் பாதிக்கப்பட்டிருக்குது எண்டு நினைக்கிறன்.

நபர் 2 : ஏன்ராப்பா என்ன பிரச்சினை

நபர் 1 : இல்லை. பிரிஞ்ச குடும்பம் எப்ப சேரும் எண்டு அறிய சாத்திரியைப் பாக்கப் போறன் எண்டு ஒற்றைக்காலிலை நிக்கிறா

நபர் 2 : அட மடையா. எங்கடை பொம்பிளைகளிலை அரைவாசி இப்படித்தான் சாத்திரிகளிட்டைப் போய் ஏமாந்து கொண்டிருக்குதுகள். அதுக்கு ஏன் மனநலம் பாதிக்கப்பட்டிருக்குது எண்ணுறாய்

நபர் 1 : அட நீ வேறை. அவ சாத்திரம் பாக்கப் போறது ரெலிசீரியலிலை பிரிஞ்சிருக்கிற அபியும் அபியின்ரை புருசனும் எப்ப சேருவினம் எண்டதைப் பற்றி

This firm is authorised by the legal services commission to provide free legal advice for you for all types of criminal matters.

- Free 24 Hrs Police Station Attendance
- Magistrates, Crown Court & Court of Appeal Representation
- Terrorism Cases
- Serious Crime, Murder/Attempted Murder, GBH
- Serious Fraud, Money Laundering, Major Scale Drug Importation
- Sexual Offences Including Rape
- HM Customs & Excise Cases
- Appeal & CCRC Cases
- Prison Law Representation

Sponsorship and Power of Attorney

We speak Tamil, French and Mauritian Creole

Criminal Defence Service

RAJ LAW SOLICITORS

Community Legal Service

"Specialist advice on all legal matters in a friendly environment"

உங்களுக்கு என்ன இடர் வந்தாலும்
சட்டத்துடன் அதனைச் சந்திக்க
நட்புணர்வுடன் நாம் இருக்கின்றோம்

Experts in Criminal Defence Service (UK)

24 hour police station **emergency** service

M: 07947 641 876 / 07956 067 587 T:020 8516 7730/020 3133 0000
Trident Business Centre, 89, Bickersteth Road, Tooting Broadway, London SW17 9SH

Immigration Law Specialists

- Fresh Asylum Application / Rule 39 European application
- Entry Clearance /Overseas Appeal
- Student Visa, Extension & Appeal
- Judicial Review & Emergency Injunction Application (24 Hrs)
- Work Permit
- Highly Skilled Migrant Programme
- Family & Other Dependant Relatives' Visa
- EU Dependant Visa/Marriage Application
- Investor / Business Visa, Civil Partnership Visa
- Indefinite Leave to Remain under the 5,7,10 & 14 year rules

Property

- We deal with Residential (Flats, House) and Commercial Conveyancing
- Purchase of Off Licence, Restaurants, Groceries, Right to buy